செ. கு. எண்:040 நாள் :16.02.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 16.2.2014

திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர் – பெரியபாளையம் பிரதான சாலையில் 7.1.2014 அன்று மின்கம்பங்களை டிராக்டரில் எடுத்துச் செல்லும் போது எதிரே வந்த வாகனம் மோதி டிராக்டர் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், டிராக்டரில் பயணம் செய்த திருவள்ளூர் வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், கீழானூர் பிரிவில் களப் பணி உதவியாளராகப் பணி புரிந்து வந்த ஆனந்தபுரம் கிராமம், கரிகலவாக்கத்தைச் சேர்ந்த திரு. அந்தோணி என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் களப் பணி உதவியாளர் திரு. அந்தோணி அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த களப் பணி உதவியாளர் திரு. அந்தோணியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9